***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 4/2018**

P.W.1 திரு.மணி த/பெ.சுப்பையா நாள் – 05.02.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

1ம் பிரதிவாதி குடும்பத்துடன் கண்டனூரில் வசித்து வருகிறார் என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது கண்டனூரில் இருந்தார் . 2, 3 பிரதிவாதிகள் கோங்குடி கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்து , அவரது கட்சி என்ன என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் அ –அட்டவணை சொத்தை தவிர இதர சொத்துக்கள் தனக்கும், தனது மகன்களுக்கும், மருமகளுக்கும் பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான் . அதனை மறுத்து நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதியின் கட்சியை நான் மறுத்து சொல்லவில்லை என்றால் சரிதான் . B அட்டவணை சொத்தில் இருந்து E அட்டவணை சொத்துக்களுக்கான கிரய பத்திரங்களின் விவரங்கள் தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . 1977 முதல் எங்கள் வீட்டில் குறைந்தது 5 பால்மாடுகள் மற்றும் 100 செம்மறிஆடுகள் இருந்தது என்பதை எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . B அட்டவணை சொத்தில் 1 மற்றும் 2 வது அயிட்ட சொத்துக்களில் பிரதிவாதிகள் வசிக்கும் வீடு உள்ளது என்றால் சரிதான் , பழைய ரைஸ்மில்லை இடித்துவிட்டு வீடு கட்டிவிட்டார்கள். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . வா.சா.ஆ.82 ஆவணம் சம்மந்தமாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் , பின்னிட்டு தான் எனக்கு தெரிய வந்தது . வா.சா.ஆ.82 ஆவணம் என்ன காரணத்திற்காக எழுதப்பட்டது என்று

எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரிதான், பின்னிட்டு தான் தெரிய வந்தது. வா.சா.ஆ.84 மார்டன் ரைஸ்மில் திறப்பு விழா சம்மந்தமான பத்திரிக்கை பற்றியும் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . வா.சா.ஆ.84 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் 1995ம் ஆண்டில் இருந்து புதுக்கோட்டையில் இருக்கிறேன் . திருமணத்திற்கு முன்பு கடியாப்பட்டியில் வசித்தேன் என்றால் சரிதான் . நான் மிசார வாரியத்தில் வேலைக்கு சேர்ந்ததற்கு பின்னிட்டு வேலைக்கு சென்றுவிட்டு , வீட்டிற்கு வருவது தான் வழக்கம் என்றால் சொந்த கிராமத்திற்கு மாதத்திற்கு இரண்டுமுறை விடுமுறை நாட்களில் சென்று வருவேன்.

**இக்கட்டத்தில் 1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*